THE TAMIL NADU LEGISLATIVE COUNCIL

Tuesday, the 28th January 1969.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Graduate Assistants in Municipal High Schools

* 9 *Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether Graduate Assistants in Municipal High Schools who have offered under Part II for their B.A., or B.Sc., Degree Examination, a language other than Tamil, are not deemed fully qualified ;

(*b*) whether they are required to pass any language Tests before confirmation or promotion ; and

(*c*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (அ), (இ) and (உ) நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியப் பயிற்சி பெருத பட்டதாரி ஆசிரியர்கள் பட்டபபடிப்பில் 2-ம் பகுதிப் பாடத்தின்கீழ் தமிழல்லாத வேறு ஏதேனும் மொழி எடுத்துக் கொண்டிருந்தால், அவாகள் எஸ்.எஸ்.எல்.சி. தரத்தில் மொழித் தேர்வு ஒன்று எழுதி வெற்றி பெற வேண்டும் என்று விதி ஏதும் தற்பொழுது செயலில் இல்லையென்ருலும் நடைமுறையில் பயிற்சி மொழியாகிய வட்டார மொழியில் அவர்கள் போதுமான அளவு கல்வியறிவு பெற்றிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆசிரியர் ஒருவர் எஸ்.எஸ்.எல்.சி.-யில் வட்டார மொழியை எடுத்துக் கொண்டவராக இருந்தால் அவர் எந்தப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றுகிருரோ அந்தப் பள்ளியில் வட்டார மொழியே பயிற்சி மொழியாக இருக்குமானுல், அந்த ஆசிரியர் முழுக் கல்வித் தகுதி பெற்றவராய்க் கருதப்படுவார்.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : தலைவரவாகளே, அரசினர் பள்ளியிலே பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு இத்தகைய விதியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அரசினர் பள்ளியில் பணிபுரிபவர்கள் மொழிவாரி சிறுபான்மையினராக இருப்பார்களாளுல், நான்காண்டுகளுக்குள் மொழித் தேர்வு எழுதி, எம்.பி.எஸ்.சி. வைக்கிற தமிழ் மொழி பரீட்சையில் தேர்வு பெறவேண்டும். அப்போதுதான் " புரோபேஷன் " முடிவு பெறும்.

திரு. சா. கணேசன் : தலைவரவர்களே, தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஆசிரியர்கள், பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. பரீட்சையில் தேறியிருந்தாலும், தமிழில் சிறப்பாக பயிற்சி பெருவிட்டால் அவர்கள் பயிற்சி பெறுவது கல்வித் துறைக்கு நன்மை பயக்கும் என்று அரசாங்கம் கருதினுல், அவர்களை தமிழ்த் துறையிலே பயிற்சி பெற அதற்கு வேண்டிய சலுகைகளையும், வசதிகளையும் கொடுத்து அவர்களுக்கு பயிற்சி பெறும் வாய்ப்பைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

[28th January 1969

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி. தமிழ் எடுத்து படித்து வருகிற ஆசிரியர்களுக்கு போதுமான அளவிற்கு தமிழ் அறிவு இருக்கும் என்று கருத வேண்டியிருக்கிறது. தமிழ் அல்லாத ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. அளவிற்கு தமிழில் பயிற்சி பெற்று தேர்வு எழுதவேண்டுமென்று இருக்கிறது. அவர்கள் தமிழ ஆசிரியர்களாக பொறுப்பேற்று பணியாற்ற வேண்டுமானால், அதற்கான தனித் தகுதி பெறவேண்டும்.

THIRU A. R. DAMODARAN : In view of the fact that in many high schools (former Board High Schools) there is an English medium class even for the S.S.L.C. students, will it not be possible for such Graduate Assistants to be absorbed for teaching these English medium classes instead of asking them to qualify for tests in Tamil ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட பள்ளிகளில்தான் இந்த நிபந்தனை தேவைப்படுகிறது. ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகக் கொண்டிருக்கும் இடங்களில் தேர்வு தமிழில் பெற்றிருக்கவேண்டுமென்று எதிர் பார்ப்பதில்லை.

Express Buses

*10 *Q*.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of State Transport express buses plying daily between Ramanathapuram and Krishnagiri ; and

(*b*) whether there is any proposal to increase them ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) இரண்டு.

(இ) இல்லை.

*11 *Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether a State Transport Express Bus plying between Theni and Usilampatti of Madurai district in January 1968 collided with a car or a Lorry which was running at 60 miles speed ;

(*b*) whether 20 persons in the Express Bus sustained injuries due to this accident ; and

(*c*) the number of such accidents in which express buses were involved during the last six months ?

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1968 ஜனவரியில் மதுரை மாவட்ட தேனியிலிருந்து உசிலம்பட்டி நோக்கிச் சென்ற தமிழக அரசு விரைவு வண்டி 60 மைல் வேகத்தில் எதிரில் வந்த காருடன் அல்லது லாரியுடன் மோதியதா ?

(இ) இதனால் துரித வண்டியில் இருந்த 20 பேருக்குக் காயமா?

(உ) இம்மாதிரி துரித வண்டிகளில் சென்ற 6 மாதத்தில் எத்தனை விபத்துக்கள் நடந்தன?